சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No.61/2021

பெயர் திரு.சர்புதீன் நாள்.04.03.2026
த/பெ. சுலைமான் சாகிப்

**பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) கந்தப்பன் என் தகப்பனாரிடம் கடன் பெற்றிருந்தார் என்றால் சரிதான். அதனால் கந்தப்பன் மீது என் தகப்பனார் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணையை நிறைவேற்ற மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் கந்தப்பனிடம் நிறைவேற்று மனுவில் கண்ட தொகையை பெற்றுக் கொண்டு வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்வதாக கூறிவிட்டு சென்றார் என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவை கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னர் சொத்தை சுவாதீனம் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை என் தகப்பனார் அனுபவம் செய்து வருவதாக கூறுவதற்கு அடங்கல் நகல் வாங்கி தாக்கல் செய்யவில்லை.

2) என் தகப்பனாருக்கு சேர வேண்டிய தொகை பைசல் செய்யப்பட்டு விட்டது என்றாலும், அதனால் தான் அவர் சொத்தின் சுவாதீனம் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால்

சரியல்ல. கிணறு, பம்பு செட் மற்றும் பயிர் உள்ளது. கிணற்றுக்கான மின் இணைப்பு இன்று வரை எங்கள் பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மின் இணைப்பு வாதிகள் பெயரில் உள்ளது என்றால், கந்தப்பனின் தகப்பனார் பெயரில் உள்ளது. வழக்கு சொத்து சம்பந்தமாக என் தகப்பனார் எனக்கு எவ்வித ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை. வழக்கு சொத்திற்கு நான்கு எல்லைகளில் யார் உள்ளனர் என்று எனக்கு தெரியும். திசை வைத்து சொல்ல இயலாது. வழக்கு சொத்தை நாங்கள் அனுபவம் செய்யவில்லை என்றாலும், அதனால் தான் நான்கு எல்லைகளில் உள்ள நபர்களை என்னால் கூற இயலவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

3) கந்தப்பன் காலம் முதலே வழக்கு சொத்தை வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.6 பட்டா கந்தப்பன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். கந்தப்பன் மற்றும் அவரது மகன்கள் இன்று வரை சொத்துகளை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், அதனால் அவர்களுக்கு எதிரிடை அனுபவம் பாத்தியம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கு நாங்கள் வாய்தா ஏதும் செலுத்தியதில்லை. வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமை மற்றும் அனுபவம் இல்லை என்றாலும், வாதிகளுக்கு எதிரிடை அனுபவ பாத்தியம் உள்ளது என்று சொன்னாலும், நீதிமன்றம் மூலம் வழக்கு சொத்தை ஒப்புதல் எடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எவ்வித

உரிமையும் இல்லாமல் எதிர் வியாஜ்யம் செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து அல்லாத எங்களின் மற்ற சொத்துகளை பங்கு பிரித்துக் கொண்டோம் என்றால் இல்லை.. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**